C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

தென்னிந்திய தமிழ் திருச்சபை அல் அய்ன்

# மன்னா..

பொழிவு : 18 **FEBRUARY 2026** ஆகாரம் : 02



நீங்கள் பிழைக்கும்படிக்குத்
தீமையை அல்ல, நன்மையைத்
தேடுங்கள்; அப்பொழுது நீங்கள்
சொல்லுகிறபடியே சேனைகளின்
தேவனாகிய கர்த்தர்
உங்களோடே இருப்பார்.

ஆமோஸ் 5:14

# UPCOMING EVENTS

**All Sun Feb '26** — Sunday
5:00 pm
**OUT REACH MINISTRY - CAMP**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**07 21 Feb '26** — Tuesday
7:30 pm
**HOLY COMMUNION SERVICE**
Church Members Home

**15 Feb '26** — Saturday
10:00am - 1:00pm
**CHURCH PICNIC**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**All Wed Feb '26** — Wednesday
7:30 pm
**BIBLE STUDY & PRAYER**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**14 28 Feb '26** — Saturday
7:30pm - 09:30pm
**EVENING SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**18 Feb '26** — Saturday
7:30pm - 09:30pm
**ASH WEDNESDAY SERVICE**
Evangelical Church Campus
Kanad hospital - Al Ain

**28 Feb '26** — Saturday
9:30 pm
**BIBLE QUIZ**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**28 Feb '26** — Tuesday
11:30 pm
**MONTH END SERVICE**
Parsonage - C.S.I. Tamil Parish Alain

**All Sat Feb '26** — Saturday
6:30 pm
**CHILDREN BIBLE SCHOOL**
C.S.I. TAMIL PARISH AL AIN, UAE

**From 18** — Everyday
6:00am to 6:30am
**40 DAYS LENT DAILY SERVICE**
Parsonage - C.S.I. Tamil Parish
Alain / Zoom

**அன்பிற்கினியவர்களே, ஆண்டவர் இயேசு கிறிஸ்துவின் திருப்பெயரில் அனைவருக்கும் நல்வாழ்த்துக்கள்.**

அன்பிற்கினியவர்களே, பிப்ரவரி 20ஆம் தேதி உலக சமூக நீதி தினம் **(WORLD DAY OF SOCIAL JUSTICE)** என கடைபிடிக்கப்படுகிறது. 1929 ஆம் ஆண்டு அமெரிக்காவில் பிறந்த மார்டின் லூதர் கிங் ஜூனியர் என்பவர் அமெரிக்காவில் இருந்த கருப்பர் இன மக்களுக்கான வாழ்வுரிமை போராட்டத்திற்காக போராடினவர். இவர் பேப்டிஸ்ட் திருச்சபையின் ஆயர்,சமூக ஆர்வலர் ஆவார். 1963 ஆம் ஆண்டில் மாபெரும் பேரணியை நிகழ்த்தி, "நான் ஒரு கனவு காண்கிறேன்" **(I HAVE A DREAM)** என்று சொற்பொழிவு ஆற்றினார், இதனை உலகமே வியந்து பார்த்தது. தொடர் போராட்டத்தின் விளைவாக 1965 ஆம் ஆண்டு கருப்பர் இன மக்களுக்கும் வெள்ளை இன மக்களைப் போன்று சமமான வாக்குரிமையைப் பெற்றுத் தந்தார்.

1964ஆம் ஆண்டில் இவருக்கு நோபல் பரிசு வழங்கப்பட்டது. மார்ட்டின் லூத்தர் கிங் ஜூனியரின் போதனைகள் அகிம்சை, அன்பு, சமத்துவம், நீதி என்பதுவே. இவர் மக்களால் கருப்பு காந்தி என அழைக்கப்பட்டார். 1968 ஆம் ஆண்டு ஏப்ரல் நான்காம் தேதி வெள்ளையர் ஒருவரால் இவர் சுட்டுக் கொல்லப்பட்டார்.

ஆமோஸ் தீர்க்கதரிசி கி.மு.எட்டாம் நூற்றாண்டின் மையப் பகுதியில் இஸ்ரவேல் மக்களுக்கான தீர்க்கதரிசனம் உரைத்தார். அந்நாளில் அந்நாடு சீறும் சிறப்புமாய் இருந்தது.ஆனால் வளமும் வாழ்வும் செல்வருக்கும் வலியோருக்கும் மட்டுமே இருந்தது;ஏழை எளியவர்கள் நசுக்கப்பட்டுத் தாழ்வுற்றுக் கிடந்தனர்.

வலியோரை வாழ்த்தி எளியோரை வாட்டும் அநீதியும் பொய்மையும் நிறைந்த சமுதாயத்தை கண்டு சீறுகிறார் ஆமோஸ். மனிதர் மனிதரை கசக்கிப் பிழியும் கொடுமையை கடுமையாய் கண்டிக்கிறார். நீதியையும், நேர்மையையும் வளர்த்துக் கொண்டாலன்றி, மக்களினம் கடவுளின் கடும் தண்டனைக்கு உள்ளாகும் என்று எச்சரிக்கை விடுக்கின்றார்.




**நன்மையை தேடுங்கள்:**

அன்றைக்கான இஸ்ரவேல் சமூகத்தில் இருந்த தீமையான காரியங்களான ஏழை எளியோரை ஒதுக்குதல், லஞ்சம், ஊழல் போன்ற அக்கிரமங்களை விட்டொழித்து, நன்மையானதை தேடுங்கள் என்று ஆமோஸ் தீர்க்கதரிசி இஸ்ரவேல் மக்களுக்கான கண்டிதமான இறைவாக்கை உரைத்தார். (ஆமோஸ் 5:14)

**நியாயத்தை நிலைப்படுத்துங்கள்:**

நீங்கள் தீமையை வெறுத்து, நன்மையை விரும்பி, நியாயத்தை நிலைப்படுத்துங்கள் என்று அன்றைக்கு ஆமோஸ் தீர்க்கர் இஸ்ரவேல் மக்களுக்கு உரைத்தார் (ஆமோஸ் 5:15). ஏற்றத்தாழ்வுகள் மறைய வேண்டும் என்றும், நீதி நியாயம் நிலைத்திட வேண்டும் என்றும், எளியோர் வலியோர் சமூக சமத்துவம் நிலவிட வேண்டும் என்றும் கடவுளின் வாக்காக ஆமோஸ் தீர்க்கர் உரைப்பதைக் காண்கிறோம்.

நிறைவாக, ஒரு இனப் போராளியாக சமூக நீதியை நிலை நிறுத்த மார்ட்டின் லூதர் கிங் ஜூனியர் போராடினார், அதன் விளைவு வெற்றியையும் பெற்றார். அன்றைக்கான இஸ்ரவேல் சமூகத்தில் இருந்தே நீதி நியாய ஏற்றத்தாழ்வுகளை கடவுள் எச்சரிப்பின் சத்தமாக ஆமோஸ் தீர்க்கதரிசி வழியாக உரைத்ததை நாம் சிந்தித்துப் பார்ப்போம். இன்றையச் சூழலில் நாம் வாழும் சமூகத்தில் ஒரு கிறிஸ்தவராக நீதி நியாயங்களை நிலை நிறுத்தி வாழ்வோம் அப்பொழுது கர்த்தர் நம்மோடு இருப்பார் (ஆமோஸ்5:14), ஆசீர்வதிப்பார்,
ஆமென்.

இறைப்பணியில்,

ஆயர்.

Rev. S.Baktha Thiyagarajan

# செயலர் மடல்



பிரியமான திருச்சபை மக்கள் அனைவருக்கும் அன்பின் வாழ்த்துக்கள். கர்த்தருடைய பெரிதான கிருபையினால், இந்த வருடத்தை ஆசீர்வாதமாக தொடங்க கிருபை செய்தார். தேவனுடைய நாம மகிமைப்படுவதாக. இந்த மாதத்திலும் நாம் முடிவு செய்தபடி, திருச்சபையில் இன்பச் சுற்றுலா வருகிற 15ஆம் தேதி நடைபெற உள்ளது அனைவரும் கலந்து கொள்ள வேண்டும் என்று அன்புடன் அழைக்கிறோம். அதேபோல் லெந்து கால சிறப்பு காலை வழிபாடும் நடைபெற உள்ளது அதிலும் அனைவரும் பங்கு பெற வேண்டிக் கொள்கிறோம்.

உங்கள் சிந்தனைக்கு

## தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள்

## (ஆமோஸ் 5:14)




மனித வாழ்க்கை தினந்தோறும் சோதனைகளால் நிரம்பியுள்ளது. நன்மையா அல்லது தீமையா? நேர்மையா அல்லது சுயநலமா? சத்தியமா அல்லது வசதியா? இத்தகைய சூழலில், தீர்க்கதரிசி ஆமோஸ் மூலம் தேவன் அளித்த இந்த வார்த்தை காலத்தைக் கடந்து இன்றும் உயிருள்ள செய்தியாக ஒலிக்கிறது. “தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள்” என்பது ஒரு ஆலோசனை அல்ல; அது உயிர்–மரணம் சார்ந்த ஆன்மீக அழைப்பு.

### ஆமோசின் காலச் சூழல்

ஆமோஸ் தீர்க்கதரிசி வாழ்ந்த காலத்தில் இஸ்ரவேல் வெளிப்படையாக செழிப்பாக இருந்தது. ஆனால் அந்தச் செழிப்பின் அடியில் அநியாயம், ஏழைகளின் ஒடுக்குமுறை, ஊழல், போலியான ஆராதனை ஆகியவை ஆழமாக வேரூன்றியிருந்தன. மக்கள் தேவனைத் தேடுவதாகச் சொல்லினார்கள்; ஆனால் அவர்களின் செயல்கள் தேவனுக்குப் பிரியமானவையாக இல்லை. அதனால்தான் தேவன் தெளிவாகச் சொல்கிறார்:

**“நீங்கள் உயிரோடிருக்க வேண்டுமென்றால், தீமையை விட்டு நன்மையைத் தேடுங்கள்.”**

தீமை என்றால் பெரிய குற்றங்கள் மட்டுமல்ல.

- உண்மையை மறைப்பது
- தவறை நியாயப்படுத்துவது
- பிறரின் வலியை அலட்சியம் செய்வது
- அதிகாரத்தை தவறாகப் பயன்படுத்துவது
- வெளிப்படையான பக்தி, உள்ளார்ந்த அநியாயம்

இவை அனைத்தும் தேவன் பார்வையில் தீமையாகக் கணக்கிடப்படுகின்றன. மனிதன் பல நேரங்களில் “அனைவரும் இப்படித்தான் செய்கிறார்கள்” என்று எண்ணி, தீமையை சாதாரணமாக ஏற்றுக்கொள்கிறான். ஆனால் தேவன், தீமையுடன் சமரசம் செய்பவரோடு இருப்பதில்லை

### நன்மையைத் தேடுதல் – ஒரு செயல் அழைப்பு

“நன்மையைத் தேடுங்கள்” என்பதன் அர்த்தம், நன்மை தானாக வந்து சேரும் என்பதல்ல. அதை தேட வேண்டும், தேர்ந்தெடுக்க வேண்டும், நிலைத்திருக்க வேண்டும்.

நன்மை என்பது:

- சத்தியத்திற்காக நிற்பது
- நீதியை நடைமுறைப்படுத்துவது
- பலவீனருக்காக குரல் கொடுப்பது

- நேர்மையுடன் வாழ்வது
- தேவனுக்கு பயந்து மனிதனை நேசிப்பது

இவை சுலபமானவை அல்ல. ஆனால் இவையே தேவனுடைய சன்னிதியில் வாழும் வாழ்க்கையின் அடையாளங்கள்.

## "அப்பொழுது கர்த்தர் உங்களோடு இருப்பார்" – வாக்குத்தத்தத்தின் ஆழம்

இந்த வசனத்தின் முக்கியமான பகுதி இதுதான். நன்மையைத் தேடுகிறவர்களோடு கர்த்தர் இருப்பார். அது வெறும் உணர்ச்சி அல்ல;

- வழிகாட்டுதலாக
- பாதுகாப்பாக
- வலிமையாக
- சமாதானமாக
- ஆசீர்வாதமாக

தேவன் தம்மோடு இருப்பது மனித வாழ்வின் மிகப்பெரிய செல்வம். வெற்றி, செல்வம், பதவி அனைத்தும் ஒரு காலத்திற்கே; ஆனால் தேவனுடைய சன்னிதி நித்தியமானது.

## இன்று நமக்கு சொல்லும் செய்தி

இன்றைய உலகமும் ஆமோசின் காலத்தைப் போலவே உள்ளது. வெளிப்படையில் முன்னேற்றம்; உள்ளார்ந்த முறிவு. இப்படிப்பட்ட காலத்தில் தேவன் தம் மக்களை நோக்கி மீண்டும் அழைக்கிறார்:

## "தீமையை அல்ல, நன்மையைத் தேடுங்கள்"


இது தனிப்பட்ட வாழ்க்கையிலும், குடும்பத்திலும், பணியிடத்திலும், சமூகத்திலும் பொருந்தும். நாம் நன்மையைத் தேர்ந்தெடுத்தால், நாம் தனியாக இருக்கமாட்டோம். சேனைகளின் தேவனாகிய கர்த்தர் நம்மோடு இருப்பார்.

உயிரோடு வாழ்வது என்பது சுவாசிப்பது மட்டும் அல்ல; தேவனுடைய சன்னிதியில் வாழ்வதே உண்மையான வாழ்க்கை. அந்த வாழ்க்கைக்கான வழி தெளிவாகக் கொடுக்கப்பட்டுள்ளது:

தீமையை விட்டு நன்மையைத் தேடுங்கள்.

அப்பொழுது, நாம் சொல்லுகிறபடியே அல்ல—

தேவன் வாக்குப்பண்ணியபடியே— கர்த்தர் நம்மோடு இருப்பார்.




**இறைப் பணியில்**

MR. SANTHOSH KUMAR

திருச்சபைச் செயலர்

# அவரை அமர்ந்திருக்கவிடாதிருங்கள்

**"அவர் எருசலேமை ஸ்திரப்படுத்தி, பூமியிலே அதைப் புகழ்ச்சியாக்கும் வரைக்கும் அவரை அமர்ந்திருக்கவிடாதிருங்கள்."**
**-ஏசாயா 62:7**

*என்பது ஜெபத்தின் ஆழத்தையும், விசுவாசியின் பொறுப்பையும் வலியுறுத்தும் ஒரு வல்லமையான வசனம். தேவன் தாமே ஒரு வாக்குத்தத்தத்தை கொடுத்திருந்தாலும், அதை நிறைவேறும் வரை அவரது ஜனங்கள் ஜெபத்தில் உறுதியாக நிலைக்க வேண்டும்*

## எருசலேம்

*தேவனுடைய நாமம் வாசம் செய்யத் தேர்ந்தெடுக்கப்பட்ட நகரம். அது வெறும் ஒரு நகரம் மட்டுமல்ல; தேவனின் ஆட்சி, சமாதானம், மீட்பு மற்றும் மகிமையின் அடையாளமாக இருக்கிறது. இங்கு "எருசலேம்" என்பது ஆன்மீகமாக தேவனுடைய சபையையும், அவரது ராஜ்ய நோக்கத்தையும் குறிக்கிறது.*

## "ஸ்திரப்படுத்தி"

*தேவன் எருசலேமைக் ஸ்திரப்படுத்துவேன் என்று வாக்குத்தத்தம் கொடுத்தார். அதாவது:*

- *குலுங்காத நிலை*
- *சத்துருக்களால் அழிக்க முடியாத பாதுகாப்பு*
- *ஆன்மீக நிலைத்தன்மை*

*இது தேவன் தனது ஜனங்களை உறுதியாக நிறுத்தும் செயலாகும்*

## "புகழ்ச்சியாக்கும்வரைக்கும்"

*தேவனுடைய திட்டம் எருசலேம் பூமியிலே புகழ்ச்சியாக மாற வேண்டும் என்பதே. அதாவது:*

- *மக்கள் தேவனை மகிமைப்படுத்த வேண்டும்*
- *உலகம் தேவனின் செயல்களை கண்டு வியக்க வேண்டும்*
- *தேவனுடைய மகிமை வெளிப்பட வேண்டும்*

## "அவரை அமர்ந்திருக்கவிடாதிருங்கள்" இந்த வசனத்தின் மிக முக்கியமான பகுதி இதுவே. தேவன் சொல்கிறார்:

- *"ஜெபிக்காமல் அமைதியாக இருக்காதீர்கள்"*
- *"வாக்குத்தத்தம் நிறைவேறும் வரை விடாமுயற்சியுடன் ஜெபியுங்கள்"*
- *"என்னை நினைவூட்டுங்கள், என்னைத் தேடுங்கள்"*

*இது தேவனை கட்டாயப்படுத்துவது அல்ல; தேவனோடு இணைந்து அவரது திட்டத்தைநிறைவேற்றும் ஜெபம். இன்றைய காலத்தில்*

- *சபையின் எழுப்புதல்*
- *குடும்பங்களின் மீட்பு*
- *தேசங்களின் மாற்றம்*
- UAE *போன்ற தேசங்களில் ஆன்மீக எழுச்சி*


*இவை எல்லாம் நிறைவேறும் வரை, நாம் அவரை அமர்ந்திருக்கவிடாதிருக்கும் ஜெபவாழ்க்கை கொண்டவர்களாக இருக்க வேண்டும்.*

## ஜெபம் நிறுத்தப்படக் கூடாது

- *அவரை நினைவூட்டுங்கள்*
- *அவரைத் தேடுங்கள்*
- *அவரை அமர்ந்திருக்கவிடாதீர்கள்*
- *ஏனெனில் அவர் வாக்குத்தத்தம் கொடுத்தவர்*
- *அதை நிறைவேற்றுவார்*

*ஏசாயா 62:7 நமக்கு ஒரு பெரிய பொறுப்பை நினைவூட்டுகிறது. தேவன் வாக்குத்தத்தம் கொடுத்துள்ளார்; ஆனால் அந்த வாக்குத்தத்தம் நிறைவேறும் வரை ஜெபத்தில் நிலைத்திருக்கவேண்டும். ஏனெனில் அவர் நிச்சயமாக நிறைவேற்றுவார்.*

*ஆமென்.*




Article by

**MR. ASHOK KUMAR**

Men's Fellowship



# போர் கவசங்கள்

கிறிஸ்துவுக்குள் அன்பானவர்களே, கடந்த ஆண்டு முழுவதும் நம்மை கண்மணி போல் காத்து, இந்த புதிய ஆண்டை (2026) காணச்செய்த தேவாதி தேவனுக்கு ஸ்தோத்திரம் உண்டாவதாக.

உலகத்தில் எங்கும் நடக்கும் வன்முறைகள், போர் செய்திகள் நம்மை கலங்கச் செய்கின்றன. ஆனால் நாம் எந்த சூழ்நிலையிலும் கலங்காமல் வாழ வேண்டுமென்பதே கர்த்தரின் விருப்பம். அப்படியிருக்க நாம் என்ன செய்யலாம்?

### தேவன் அருளிய போர் கவசங்கள்

பவுல் அப்போஸ்தலர் எபேசியர் 6:13 ல் கூறியுள்ள படி நாம் தேவனுடைய சர்வாயுதவர்க்கத்தை எடுத்துக் கொண்டு பலப்பட வேண்டும்.

### சத்தியம் என்னும் கச்சை

சத்தியம் உங்களை விடுதலையாக்கும் (யோவான் 8:32) பாவத்தில் அடிமைப்பட்டிருக்கும் நாம் சத்தியத்தால் விடுதலையாவோம். சத்தியம் என்னும் கச்சையை அணிந்துகொண்டு, நானே வழியும், சத்தியமும் ஜீவனுமாயிருக்கிறேன் (யோவான் 14:6) என்று சொன்ன இயேசுவை கச்சையாய் அணிந்து உறுதியாய் பற்றிக் கொள்வோம்.

### நீதியென்னும் மார்க்கவசம்

கர்த்தர் நீதியை நேசிக்கிறார் (சங்கீதம் 33:5) நீதியையும், தயையையும் பினபற்றுகிறவன், ஜீவனையும், நீதியையும், மகிமையையும் கண்டடைவான். (நீதிமொழிகள் 21:21)

நீதியை செய்கிறவன் அவர் நீதியுள்ளவராயிருக்கிறது போல தானும் நீதியுள்ளவனாயிருக்கிறான். (1 யோவான் 3:7) கர்த்தர் நேசிக்கிற நீதியை நாமும் நேசித்து மார்க்கச்சையாக அணிந்து கொள்வோம்.

### சமாதானத்தின் சுவிசேஷத்திற்குரிய ஆயத்தம் என்னும் பாதரட்சை

சமாதானமாக வாழும் வாழ்க்கை கர்த்தருக்கு பிரியமானது. பொல்லாப்பை விட்டு நீங்கி, நன்மை செய்து, சமாதானத்தை பின் தொடரக்கடவன் என்று பேதுருவின் கடிதத்தில் வாசிக்கிறோம். (1 பேதுரு 3:11) இயேசு பிறந்ததை சமாதானத்தின் நற்செய்தியாக தேவ தூதர்கள் உலகிற்கு அறிவித்தனர். நாம் சமாதானமாக வாழ்வதின் மூலம் சுவிசேஷத்தை அறிவிக்கும் ஆயத்தம் என்னும் பாதரட்சையை கால்களில் தொடுத்து கொள்வோம்.

### விசுவாசம் என்னும் கேடகம்

விசுவாசமே உலகத்தை ஜெயிக்கிற ஜெயம். விசுவாச வாழ்க்கை பயத்தை விரட்டி விடும். விசுவாசத்தினால் சந்தோஷமாக, சமாதானமாக வாழலாம். கடுகு விதையளவு விசுவாசம் இருந்தால் உங்களால் கூடாத காரியம் ஒன்றுமிராது என்று இயேசு சொல்வதை மத்தேயு (17:20)ல் வாசிக்கலாம். கண்களால் காணாத கர்த்தரை நாம் விசுவாசிக்கும் போது இரட்சிப்பை அடைகிறோம். உங்கள் விசுவாசத்தின் பலனாகிய ஆத்தும இரட்சிப்பை அடைகிறீர்கள் (1பேதுரு 1:9) என்று பேதுரு குறிப்பிடுகிறார். இப்படிப்பட்ட விசுவாசத்தை கேடகமாக பிடித்துக்கொள்வோம்.

### இரட்சண்யம் என்னும் தலைச்சீரா

இரு சக்கர வாகனம் ஓட்ட தலைக்கவசம் (helmet) மிகவும் இன்றியமையாதது. பிரயாணத்தை பாதுகாப்புடன் முடிக்கவே தலைக்கவசம் அணியச்சொல்லி அரசு கட்டளை பிறப்பித்துள்ளது.. உலகம் இரட்சிக்கப்பட பிதாவினால் அனுப்பப்பட்டவர் இயேசுகிறிஸ்து. (யோவான் 3:16,17) அவராலேயன்றி வேறொருவராலும் இரட்சிப்பு இல்லை.(அப் 4:12) நாமும் நமது உலகத்தின் வாழ்க்கைப் பிரயாணத்தில் இரட்சிப்பின் தலைச்சீராவை அணிந்தால், பாதுகாப்புடன் சந்தோஷமாக வாழ்க்கையை அனுபவிக்கலாம்.

### தேவ வசனமாகிய ஆவியின் பட்டயம்

பலத்தினாலும் அல்ல, பராக்கிரமத்தினாலும் அல்ல, என்னுடைய ஆவியினாலே ஆகும் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார். (சகரியா 4:6) பரிசுத்த ஆவி உங்களிடத்தில் வரும் போது நீங்கள் பெலனடைந்து எருசலேமிலும், யூதேயா முழுவதிலும், சமாரியாவிலும், பூமியின் கடைசி பரியந்தமும், எனக்கு சாட்சிகளாயிருப்பீர்கள் (அப்: 1:8) திரும்பவும் பயப்படுகிறதற்கு நீங்கள் அடிமைத்தனத்தின் ஆவியைப் பெறாமல், அப்பா பிதாவே என்று கூப்பிடப்பண்ணுகிற புத்திர சுவீகாரத்தின் ஆவியை பெற்றீர்கள் (ரோமர் 8:15)என்று அப்போஸ்தலனாகிய பவுல் குறிப்பிடுகிறார். பரிசுத்த ஆவி நம்மை சாட்சியின் ஜீவியம் செய்ய பலப்படுத்தும். அது பட்டயமாக நம்மை பாதுகாக்கும். நாமும் இரட்சிப்பென்னும் ஆவியின் பட்டயத்தை கையிலெடுத்து நம்மை சுற்றி நடக்கும் தீங்கை ஜெயம் கொள்வோம்.

கர்த்தரின் வருகை சமீபம் என்று உணர்ந்து காத்திருக்கும் நாம், கர்த்தர் அருளிய போர்கவசங்களை அணிந்து வருகைக்காக ஆயத்தப்படுவோம். நாம் எடுத்துக்காட்டாக வாழ்ந்து, அநேகரை வருகைக்கென்று ஆயத்தப்படுத்துவோம். கர்த்தர் தாமே நம்மெல்லாரையும் ஆயத்தப்படுத்தி இந்த ஆண்டிலேயும் ஆசீர்வதிப்பாராக. ஆமென்.

Article by

**MRS. SEGENA LIVINGSTON**

Women's Fellowship

Name:

Date:

Kids
Coloring





Bible Word Search

# Apostles / Disciples



| | | | | | | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| O | I | J | E | H | J | F | X | T | U | Q | R | H | T | B |
| S | W | I | B | M | A | A | V | Q | O | P | O | U | Q | S |
| T | J | W | E | L | U | A | M | L | B | N | H | B | G | Z |
| W | U | N | Q | B | J | Y | W | E | I | G | H | B | Z | E |
| E | D | B | F | H | U | Q | J | C | S | G | D | F | O | E |
| H | A | B | A | R | T | H | O | L | O | M | E | W | Q | C |
| T | S | L | T | I | S | B | H | H | S | W | O | W | C | U |
| T | H | Z | Q | A | Q | N | N | P | P | F | W | Z | G | B |
| A | G | A | M | G | O | K | U | H | X | J | E | S | P | F |
| M | B | O | D | M | P | J | J | R | Z | F | R | X | I | J |
| Y | H | R | I | D | F | H | R | J | N | H | D | F | L | C |
| T | C | S | S | V | A | E | R | V | A | M | N | P | I | Y |
| H | P | T | W | X | T | E | V | P | H | U | A | D | H | O |
| R | K | Z | C | E | K | A | U | J | A | M | E | S | P | R |
| G | E | F | P | E | W | T | B | S | M | B | Y | C | O | Z |

Word list:

- PETER
- ANDREW
- JAMES
- JOHN
- PHILIP
- BARTHOLOMEW
- THOMAS
- MATTHEW
- JAMES
- THADDAEUS
- SIMON
- JUDAS



Name : ..........................................................................


WORD SEARCH

FIND THE WAY

Name : ..............................................

# David & Goliath Maze

Help David find his slingshot and stones.




CROSS WORD

Name : ................................................................................





# BIBLE CROSSWORD



READ THE CLUES AND FILL IN THE CORRESPONDING SQUARES ON THE PUZZLE.







## DOWN

1. BIBLICAL MATRIARCH
2. HEAVENLY HELPER
3. BIBLICAL SHIP THAT SAVED ANIMALS
5. THE BIBLE CHARACTER WHOSE WIFE TURNED INTO A PILLAR OF SALT
7. NAME CHANGED FROM ABRAM
9. ISAAC'S SON

## ACROSS

2. HE WAS CREATED BY GOD IN HIS IMAGE
4. SPECIAL TABLE FOR GOD IN THE OLD TESTAMENT
6. FIRST CHAPTER OF GENESIS IS ABOUT THIS
8. A HEAVENLY GIFT
10. HANNAH'S SON

# FEBRUARY - 2026

| | |
|---|---|
| 02-FEBRUARY | Mr. Naveen |
| 02-FEBRUARY | Miss. A. Jessica |
| 03-FEBRUARY | Mr. Noble Selvan |
| 07-FEBRUARY | Mrs. K.S. Abisha |
| 07-FEBRUARY | Master. Tarun Jaiswal |
| 12-FEBRUARY | Rev. M. Christopher Rajendran |
| 13-FEBRUARY | Dr. S. Jensin Bose |
| 14-FEBRUARY | Ms. Jayne John Joseph |
| 14-FEBRUARY | Mr. Rahul Kumar Jaiswal |
| 15-FEBRUARY | Ms. Patricia Leenus Obed |
| 16-FEBRUARY | Baby. Gianna Isabel |
| 17-FEBRUARY | Mr. Sunith Samuel |
| 19-FEBRUARY | Ms. Pearlyn Ronia Prince |
| 20-FEBRUARY | Miss. Liana Ann Samuel |
| 20-FEBRUARY | Master. Jason Eric |
| 21-FEBRUARY | Mrs. Jeba Malar Roselin Vijay |
| 22-FEBRUARY | Mrs. Jeyantha |
| 23-FEBRUARY | Mr. Ebenesar Sahayan Samuel |
| 24-FEBRUARY | Master. Moses Hanly Paul |
| 25-FEBRUARY | Ms. Mukila |

*"For I know the plans I have for you," declares the Lord, "plans to prosper you and not to harm you, plans to give you hope and a future."*

| | |
|---|---|
| 25-FEBRUARY | Miss. Hazel Hartlyn |
| 25-FEBRUARY | Mrs. Babitha Babu |
| 25-FEBRUARY | Mr. Leenus Patrick Obed |
| 25-FEBRUARY | Dr. N. Giftus Marvin |
| 25-FEBRUARY | Master. Aaron John Samuel |
| 26-FEBRUARY | Mr. Lokesh |
| 26-FEBRUARY | Mrs. Jancy Rani |

*"The Lord bless you and keep you; the Lord make his face shine on you and be gracious to you; the Lord turn his face toward you and give you peace."*

# FEBRUARY *Wedding* ANNIVERSARY

| | |
|---|---|
| 11-FEB | Mr. Justin Oliver & Mrs. Sahila Grace Justin |
| 12-FEB | Mr. A. Vijay & Mrs. Jeba Malar Roselin Vijay |
| 22-FEB | Mr. Bakkiyam & Mrs. ArputhaMary Sandanam |
| 24-FEB | Mr. A. Ravichandran & Mrs. R. Muneeswari |

"And over all these virtues put on love, which binds them all together in perfect unity." -Colossians 3:14

# Why Faithful People Leave the Church?



1 **Lack of Shepherding**
Members feel unseen when pastors preach well but neglect to pastor well.
*"The shepherd giveth his life for the sheep."*
John 10:11, KJV

2 **Leadership Without Accountability**
Trust erodes when pastors become untouchable and unaccountable.
*"Take heed therefore unto yourselves, and to all the flock."* Acts 20:28, KJV

3 **Favoritism in the Pulpit**
Pastors who favor influential donors or families create invisible, unvalued members.
*"God is no respecter of persons."*
Acts 10:34, KJV


4 **Money Over Ministry**
When sermons obsess over offerings and pressure giving, li pushes people away.
*"The love of money is the root of all evil."*
1 Timothy 6:10, KJV

6 **Holier-Than-Thou Mentality**
Prideful members who judge rather than show grace drive others away.
*"Pharsee prayed thus with himself, God, I thank thee, that I am not as other men..."*
Luke 18:11–14, KJV

7 **Groupings and Cliques**
Social circles and discrimination against 'the outsiders' fracture the body of Christ.
*"My brethren, have not the faith of our Lord Jesus Christ with respect of persons."* James 2:1, KJV

8 **Gossip Under the Guise of Concern**
Prayer requests turn into rumors that hurt instead of heal.
*"Where no wood is, there the fire goeth out."*
Proverbs 26:20, KJV

10 **Constant Focus on Money**
When giving money is constant, discipleship fades.
*"God loveth a cheerful giver."*
2 Corinthians 9:7, KJV




EDITOR
THE PRESBYTER - CSI TAMIL PARISH-ALAIN, UAE
TEL: +971 (3) 766 8353 | MOB: 056 7668 348
Email: csitcalain@gmail.com
Web: csitamilparishalain.org

STRICTLY FOR INTERNAL CIRCULATION ONLY